**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
*Ang Mo Kio Tamil Methodist Church*

**15th மார்ச் / March 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service**

| | | |
|---|---|---|
| ✝ | **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி ஷீபா ஜான்சன்**<br>Mrs. Sheeba Johnson |
| | **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| | **ஜெபம்**<br>Prayer | **திருமதி ஷீபா ஜான்சன்**<br>Mrs. Sheeba Johnson |
| ✝ | **தொடக்க பாடல்**<br>Opening Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

**என் மீட்பர் ரத்தம் சிந்தினார்**

*1. என் மீட்பர் ரத்தம் சிந்தினார்*
*மா நீதியும் சம்பாதித்தார்*
*என் சொந்த நீதி வெறுத்தேன்,*
*இயேசுவின் நாமம் நம்புவேன்;*
*நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்.*
*வேறஸ்திபாரம் மணல்தான் .*

*2. கார் மேகம் அவர் முகத்தை*
*மறைக்கும் காலம் அவரை*
*எப்போதும்போல நம்புவேன்,*
*மாறாதவர் என்றறிவேன்;*
*நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்.*
*வேறஸ்திபாரம் மணல்தான்.*

*3. மரண வெள்ளம் பொங்கினும்,*
*என் மாம்சம் சோர்ந்துபோயினும்.*
*உம் வாக்குத்தத்தம் ஆணையும்*
*என் நெஞ்சை ஆற்றித் தேற்றிடும்;*
*நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்,*
*வேறஸ்திபாரம் மணல்தான்.*

*4. நியாயத் தீர்ப்புக் காலத்தில்*
*எக்காள சத்தம் கேட்கையில்*
*அஞ்சேன், என் மீட்பர் நீதியே*
*அந்தன் என்னை மூடுமோ;*
*நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்,*
*வேறஸ்திபாரம் மணல்தான்.*

| | | |
|---|---|---|
| ✝ | **மாறி வாசித்தல் 11ம் ஞாயிறு**<br>*"சங்கீதம் 32"*<br>**"தேவனின் மன்னிக்கும் கிருபை"**<br>Psalter Reading "Psalm 32" | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ✝ | **தந்தை போற்றி**<br>Gloria Patri | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| | **துதி ஆராதனை**<br>Singspiration | |
| | **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| | **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ✝ | **காணிக்கை பாடல்**<br>Offertory Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

**பலி பீடத்தில் என்னை பரனே**

**பலி பீடத்தில் என்னை பரனே**
**படைக்கிறேனே இந்த வேளை**
**அடியேனைத் திரு**
**சித்தம் போல**
**ஆண்டு நடத்திடுவீர்.**

**கல்வாரியின் அன்பினையே**
**கண்டு விரைந்தோடி வந்தேன்**
**கழுவும் உம் திரு ரத்தத்தாலே**
**கறை நீங்க இருதயத்தை.**

*1. நீரன்றி என்னால் இப்பாரில்*
*ஏதும் நான் செய்திட இயலேன்*
*சேர்ப்பீரே வழுவாது என்னை*
*காத்து உமக்காய் நிறுத்தி.*

*2. ஆவியோடாத்மா சரீரம்*
*அன்பரே உமக்கென்றும் தந்தேன்*
*ஆலய மாக்கியே இப்போ*
*ஆசிர்வாதித் தருளும்.*

*3. சுயமென்னில் சாம்பலாய் மாற*
*சுத்தாவியே அனல் மூட்டும்*

*ஜெயம்பெற்று மாமிசம் மாய*
*தேவா அருள் செய்குவீர்.*

*4. பொன்னையும் பொருளையும் விரும்பேன்*
*மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்*
*மன்னவன் இயேசுவின் சாயல்*
*இந்நிலத்தில் கண்டதால்.*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்**
***சங்கீதம் 102:1-7, 11-12***
Scripture Reading
Psalm 102:1-7, 11-12
**மிஸ். ஷீனா நோயல்**
Miss.Sheena Noel

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

***<u>விந்தைக் கிறிஸ்தேசு ராசா</u>***

***விந்தைக் கிறிஸ்தேசு ராசா!***
***உந்தஞ் சிலுவை என் மேன்மை.***

***சுந்தரம் மிகும் இந்தப் பூவில்***
***எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும்,***

*1. திரண்ட ஆஸ்தி உயர்ந்த கல்வி,*
*செல்வாக்குகள் மிக விருப்பினும்,*
*குருசை நோக்கிப் பார்க்க எனக்*
*குரிய பெருமை யாவும் அற்பமே. – விந்தை*

*2. உம் குருசே ஆசிக்கெல்லாம்*
*ஊற்றாம், வற்றா ஜீவநதியாம்;*
*துங்க இரத்த ஊற்றில் மூழ்கித்*
*தூய்மையடைந்து மேன்மையாகினேன்.- விந்தை*

*3. சென்னி, விலா, கை காலினின்று*
*சிந்துததோ! துயரோடன்பு*
*மன்னா, இதைப்போன்ற காட்சி*
*எந்நாளிலுமே எங்கும் காணேன். - விந்தை*

*4. இந்த விந்தை அன்புக் கீடாய்*
*என்ன காணிக்கை ஈந்திடுவேன்;*
*எந்த அரும் பொருள் ஈடாகும்? - விந்தை*
*என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன். – விந்தை*

**அறிவிப்புகள்**
Announcements

✝ ***<u>மனப்பாட வசனங்கள்</u>*** — **சபையார் இணைந்து**
***<u>Memory Verses</u>*** — Congregation

***சங்கீதம் 102 : 11-12***
Psalm 102 : 11-12

***11. என் நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப்போலிருக்கிறது;***
***புல்லைப்போல் உலர்ந்துபோகிறேன்.***
***12. கர்த்தராகிய நீரோ என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய பேர்***
***பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ **சபையார் நிற்கவும் ⁄ Indicates Congregation standing**